
RNI-N0: TNTAM/2021/83936



# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 165 ஜூன்.22 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “யோகாவை வாழ்வின் ஓர் அங்கமாக்குவோம்” சர்வதேச யோகா தினத்தில் பிரதமர் மோடி வேண்டுகோள்

கொல்கத்தா: ஜூன்.22-

யோகாவை ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் கடைப்பிடிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டாம் என்றும் இதை அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றுவோம் என்றும் பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

‘ஆரோக்கியமான முதுமைக்கான யோகா’ என்ற கருப்பொருளின் கீழ், ‘சர்வதேச யோகா தினம்’ இந்த ஆண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. கொல்கத்தாவில் நடைபெற்ற யோகா தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். இதில், மேற்கு வங்க ஆளுநர் ஆர்.என். ரவி, முதல்வர் சுவேந்து அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கொல்கத்தாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவப்புச் சாலையில் நடைபெற்ற இவ்விழாவில், ஆயிரக்கணக்கான பங்கேற்பாளர்களுடன் சேர்ந்து பிரதமர் உள்ளிட்டோரும் யோகாசன பயிற்சிகளை செய்தனர்.

பின்னர் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, “அனைவருக்கும் சர்வதேச யோகா தின வாழ்த்துகள். ஜூன் 21, உலகின் மிகப்பெரிய கூட்டுக் கொண்டாட்டங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. மக்களையும் சமூகங்களையும் நாடுகளையும் இணைக்கும் தனித்துவமான சக்தி யோகாவுக்கு உண்டு. யோகாவில் பல்வேறு



நாடுகள், கலாச்சாரங்கள், பின்னணிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

இந்தியாவில் இமயமலை முதல் இந்தியப் பெருங்கடல் வரையிலம், வங்கம் முதல் குஜராத் வரையிலும் முழு நாடும், யோகாவின் ஆன்மாவில் மூழ்கியுள்ளது.

இது ஒரு வாழ்க்கை முறையாக மாறி வருகிறது. அனைவரும் யோகாவை ஏற்கின்றனர் என்பதை இது நிரூபிக்கிறது. யோகா என்பது வெறும் ஓர் உடற்பயிற்சி மட்டுமல்ல. அது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் உயிர்சக்தி, நல்வாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துகிறது.

நமக்கு வயதாகும்போது ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் ஆற்றலுடனும் இருக்க யோகா உதவுகிறது. உடலின் நெகிழ்வுத்தன்மை, மனதின் சமநிலை, உணர்ச்சியின் வலிமை ஆகியவற்றை யோகா ஆதரிக்கிறது. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கிறது. வாழ்க்கை முறை சமநிலையின்மையால் உடல்நல சவால்கள் எழுகின்றன. நல்லிணக்கம், ஒழுக்கம், உள் அமைதிக்கான ஒரு நடைமுறைப் பாதையை யோகா வழங்குகிறது. யோகா தனிப்பட்ட நல்வாழ்க்கு மட்டுமல்ல; அது உலக அமைதிக்கான ஒரு பாதையும்கூட. இந்த பயிற்சி சுய விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது, மன அழுத்தத்தைக் குறைக்கிறது. மக்களிடையே புரிதலையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துகிறது. யோகாவை ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் கடைப்பிடிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டாம். யேகாவை அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றுவோம்” என கேட்டுக்கொண்டார்.

## நீட் தேர்வு, இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு திமுக மாணவர் அணி சார்பில் ஜூன் 23ல் ஆர்ப்பாட்டம்

சென்னை: ஜூன்.22-

நீட் தேர்வு மற்றும் இந்தி, சமஸ்கிருத திணிப்பைக் கண்டித்து திமுக மாணவர் அணி சார்பில் ஜூன் 23 ஆம் தேதி சென்னை சைதாப்பேட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திமுக மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பாசிச பாஜக அரசால் இந்தியா முழுவதும் யதிணிக்கப்பட்ட நீட் தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் மோசடிகள் முறைகேடுகள் அம்பலப்பட்டு வருகின்றன. திமுக ஆட்சியில், நீட் தேர்வில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

இந்த ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக அறிவித்ததிலிருந்து மறு தேர்வு அச்சத்தால் இந்தியா முழுவதும் மாணவர்கள் பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் மாணவர்கள்



பலர் தற்கொலை செய்துகொண்டு செத்து மடிகின்றனர். இது பாசிச மோடி அரசால் நிகழ்த்தப்படும் பச்சைப் படுகொலையாகும். இத்தகைய நுழைவுத் தேர்வுகளையும் தகுதித் தேர்வுகளையும் ரத்து செய்யக் கோரி பாசிச மோடி அரசினை திமுக தொடர்ந்து நிர்பந்தித்து வருகிறது.

அதேபோல் ஒன்றிய பாஜக அரசு, மொழிவாரி மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதிலும், தாய்மொழியைத் துறக்கச் செய்து, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளை மக்களிடையே திணித்து அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கும் சதிச் செயலில் ஈடுபட்டு வருகிறது. 2014 ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பாஜக ஆட்சி அமைந்த திலிருந்தே, தமிழ்நாட்டில் வடமொழித் திணிப்பை கல்வி நிலையங்களில் பாடத்திட்டம் வழியாகவும் இதர பல்வேறு வகைகளிலும் செய்து வருகிறது.

தற்போது ஒன்றிய அரசுப் பள்ளிகளில் (CBSE) 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியைக் கற்க வேண்டும் எனும் திட்டத்தைச் செயல்படுத்திட ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறை ஆணை பிறப்பித்துள்ளது. இதனைத் திமுக தலைவர் ஸ்டாலின் கண்டித்திருக்கிறார்.

எனவே, ஒன்றிய அரசின் இம்முயற்சிகளை தடுத்திட, ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி பாஜக அரசின் நீட்தேர்வு மற்றும் இந்தி, சமஸ்கிருத திணிப்பை கண்டிக்கும் வகையிலும், அவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும் தலைநகராம் சென்னை மாநகர், சைதையில் "கலைஞர் பொன்விழா வளைவு" அருகில், ஜூன் 23 (செவ்வாய்கிழமை) அன்று காலை 09.00 மணியளவில், திமுக மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். உயிர்க்கொல்லி நீட் தேர்வினை ஒழித்திடுவோம். வடமொழி திணிப்பை தடுத்திடுவோம். அண்ணா தந்த இருமொழி கொள்கையை போற்றிடுவோம்” என்று தெரிவித்துள்ளார்.

## அமோனியா வாயு கசிவால் 7 பேர் உயிரிழப்பு

திருவள்ளூர், ஜூன்.22-

பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்டுள்ளது. ஆலையில் ஏற்பட்ட அம்மோனியா வாயு கசிவு காரணமாக 60க்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள் மயக்கமடை ந்துள்ளார். அம் மோனியா வாயுவை சுவாசித்த சில தொழிலா ளர்களுக்கு வாய், மூக்கில் ரத்தம் கசிந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்ட 9 பேர் ஆபத்தான நிலை யில் மருத்து வமனையில் அனும திக்கப் பட்டு ள்ளனர். சென்னை ஸ்டா ன்லி அரசு மருத்து வமனையில் 9 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. 9 பேரில் 7 பெண்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். மஞ்சங்கரணையில் உள்ள வேல்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 7 பேர் உயிரிழந்துள்ளார். அமோனியா வாயு கசிவு பாதிப்பை அடுத்து சம்பவ இடத்துக்கு தேசிய பேரிடர் மீட்பு குழு விரைந்துள்ளது. அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்புக் குழு பெரியபாளையத்துக்கு விரைந்துள்ளது.

## பொறுப்பேற்ற 20வது நாளில் மதுரை ஆட்சியர் ஆகாஷ் இடமாற்றம் அதிகார மையத்தை சந்திக்க மறுத்ததால் நடவடிக்கை?

மதுரை: ஜூன்.22-

அதிகாரிகளை கையெழுத்து வாங்க காத்திருக்க வைக்காமல் முதல் முறையாக ‘இ்ஃபைலிங்’ முறையை நடைமுறைப் படுத்தியதோடு சுற்றுலா தலங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்த நேர்மையான ஐஏஎஸ் அதிகாரியான மதுரை ஆட்சியர் ஆகாஷ், பொறுப்பேற்ற 20 நாட்களில் அதிரடியாக மாற்றப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்த பிரவீன்குமார், ஆட்சி மாற்றத்துக்கு பிறகு மதுரை யிலேயே தொடர்வதற்கு தவெக அரசின் அதிகார மையங் களை அணுகி முயற்சி செய்தார். ஆனாலும் பிரவீன்குமார் மாற்றப்பட்டு அவருக்கு பதிலாக நாகப்பட்டினம் ஆட்சியராக இருந்த ஆகாஷ், மதுரை ஆட்சியராக கடந்த ஜூன் 1ம் தேதி பொறுப்பேற்றார். பொறுப்பேற்ற நாள் முதல் ஆகாஷ், மாவட்டத்தின் பாரம்பரிய இயற்கை எழில் சூழ்ந்த இடங்களையும், சுற்றுலா தலங்களையும் பார்வையிட்டு அவற்றை மேம்படுத்தி சுற்றுலா நகரான மதுரையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

உசிலம்பட்டி அருகே முதலைக்குளம் சமணர் படுக்கை, மன்னர் திருமலை நாயக்கர் மஹால், அரிட்டாப்பட்டியில் உள்ள 2,200 ஆண்டுகள் பழமையான வரலாற்று நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு அவற்றை மேம்படுத்த திட்டங்களை தயார் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவுகளை பிறப்பித்தார். சட்டப்பேரவை தேர்தலால் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் பட்டா



மாறுதல், குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, சாதி சான்று, வருமான சான்று தொடர்பான மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் கடந்த 3 மாதங்களாக தேங்கிக் கிடந்தன.

இவரது நடவடிக்கையால் அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு அனைத்து மனுக்களுக்கும் தீர்வு கண்டனர். ஆகாஷ் ஆட்சியராக பொறுப்பேற்பதற்கு முன்பு வரை, தாசில்தார்கள் முதல் அனைத்து துறை மாவட்ட அதிகாரிகள், தினமும் கோப்புகளில் கையெழுத்து பெறுவதற்கு ஆட்சியர் அறை முன்பாக, அவரைப் பார்க்க மணிக்கணக்கில் காத்துக் கிடக்கும் கலாச்சாரம் இருந்தது. ஆகாஷ் பொறுப்பேற்றதும் காகித கோப்புகளுக்கு பதிலாக இ்ஃபைலிங் போர் டல் முறையை நடைமுறைப் படுத்தினார். அவற்றை உடனுக்குடன் பார்த்து டிஜிட்டல் கையெழுத்து இட்டு அனுப்பினார்.

இதனால் ஆட்சியர் அறை முன் இது நாள் வரை காணப்பட்ட அதிகாரிகள், ஊழியர்கள் கூட்டம் தவிர்க்கப்பட்டது. பொதுமக்கள் மட்டுமே ஆட்சியரை நேரடியாக பார்க்கும் நடைமுறை பின்பற்றப்பட்டது. சுற்றுலா நகரமாக மதுரையை மேம்படுத்தும் திட்டம், இன்னும் பல தொலைநோக்கு திட்டங்களை ஆட்சியர் கவனம் செலுத்தி அதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில் பொறுப்பேற்ற 20 நாட்களில் ஆகாஷ் சிவகங்கை மாவட்டத்துக்கு மாற்றப்பட்ட பின்னணியில் பல்வேறு அரசியல் உள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளது.

இது குறித்து ஆட்சியர் அலுவலக அதிகாரிகள் சிலர் கூறுகையில், வழக்கமாக ஆட்சியராக வரக்கூடியவர்கள், மாவட்ட அரசியலில் அதி[illegible]கார மிக்கவர்களை மரியாதை நிமித்தமாக சந்திப்பது நடை முறையாக இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் ஆட்சியர் ஆகாஷூம், தவெக அமைச்சர் நிர்மல்குமார், காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றார். ஆனால், தவெகவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள ஒரு கட்சியின் மதுரை மாவட்ட முக்கிய அதிகார மையத்தை ஆட்சியர் ஆகாஷ் நேரடியாக சென்று சந்தித்து வாழ்த்து பெறவில்லை என்ற விமர்சனம் எழுந்தது.

இது குறித்து புகார் வந்ததும், ஆட்சியரை மதுரையின் குறிப்பிட்ட அதிகார மையத்தைப் பார்த்துவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். அதற்கு ஆட்சியர் ஆகாஷ், நான் யாரையும் பார்க்கக் கூடாது என்று நினைக்கவில்லை, அதுவே புகாராக எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் அதன் பிறகு அவரை பார்த்துதான் எனது பதவியை தக்க வைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று கூறி மறுத்துள்ளார்.

அதன் அடிப்படையிலேயே தற்போது ஆட்சியர் மாற்றப்பட்டுள்ளார். ஆட்சியர் மாற்றத்தின் பின்னணியில் உள்ளவர், ஏற்கெனவே திமுக அரசிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்சி மாறியதும், அவரும், அவரது கட்சியும் தற்போது தவெக அரசுக்கு ஆதரவு என்ற நிலைபாட்டை எடுத்துள்ளனர். அதனைப் பயன்படுத்தி இந்த ஆட்சியிலும் அவர் உள்ளூரில் தனது செல்வாக்கை காட்டத் தொடங்கியுள்ளார், என்றனர்.

‘தவெக ஆட்சியில் ஒரே ஒரு அதிகார மையம்தான், அந்த அதிகார மையம் நான்தான்' என்று முதல்வராக பொறுப்பேற்றபோது விஜய் கூறியிருந்த நிலையில், தற்போது அவரது கவனத்துக்கு செல்லாமலேயே, அவருக்கு கீழ் உள்ள அதிகார மையங்களால் நேர்மையான ஐஏஎஸ் அதிகாரி மாற்றப்படுவது, அவரது ஆட்சி மீது விமர்சனங்களை ஏற்படுத்த தொடங்கியுள்ளது.

## ரயில்களில் மகளிர் பெட்டியில் ஆண்கள் பயணித்தால் ரூ.2,500 அபராதம் புதிய விதிமுறை அமல்

சென்னை: ஜூன்.22-

ரயில்களில் மகளிர் பெட்டியில் ஆண்கள் பயணித்தால் அபராதம் ரூ.500ல் இருந்து ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. புதிய விதிமுறைகள் நேற்று முதல் அமலுக்கு வந்தன.

ரயில்வே செயல்பாடுகளை வலிமைப்படுத்தவும், பயணி களின் ஒழுக்கத்தை மேம்படுத் துவும் வகையில், ரயில்வே சட்டம் 1989ன் படி, பல விதிகள் திருத் தப்பட்டுள்ளன.

அதன்படி, ரயில்களில் மகளிர் பெட்டிகளில் அனுமதியின்றி ஆண்கள் நுழைந்தாலோ அல் லதுபயணித்தாலோ அபராதத் தொகை ரூ.2,500 விதிக்கப்பட் டுள்ளது. முன்பு இத்தொகை ரூ.500 ஆக இருந்தது. இது த விர, ரயில்களில் உரிய டிக்கெட் இல்லாமல் பயணிப்போர் மீது, முன்பு ரூ.250 அபராதம் விதிக் கப்பட்டது. இத்தொகை, ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பு திய விதிமுறைகள் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இது குறித்து, ரயில்வே அதிகாரி கள் கூறியதாவது: ரயில்வே சட்டம் 1989ன் படி, விதிமீறல்களுக்கு விதிக்கப்படும் அபராத தெ[illegible]கை ரூ.500ல் இருந்து அதிகபட்சமாக ரூ.5,000 வரை உயர்த்தப்பட்டுள் ளன. அதன்படி, ரயில் நிலையங் களில் அனுமதியின்றி விற்பனை செய்தால் ரூ.2 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். இதை செலுத்த மறுத்தால், நீதிமன்றம் வாயிலாக ரூ.5 ஆயிரம் வரை அபராதம் செலுத்தும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பெண்களுக்கான பெட்டி களில் ஆண்கள் பயணித்தால் ரூ.2,500 ம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ரயிலில் புகைப் பிடித்தால் ரூ.2 ஆயிரமும், மாற்றுத் திறனாளி கள் பெட்டியில் பயணித்தால், ரூ.2 ஆயிரமும் அபராதம் விதிக் கப்பட்டுள்ளது. இது தவிர, ரயில் களில் அபாயகரமான பொருட் களை எடுத்து சென்றால், ரூ.2 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை விதிக்கப்பட்ட அபராதம் ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மாணவியை பேருந்து நிறுத்தத்தில் இறக்காமல் சென்ற அரசு பேருந்து: தாராபுரம் அருகே கிராம மக்கள் இரவில் அதிரடி சாலை மறியல்!

தாராபுரம், ஜூன்.22-

தாராபுரம் பழனி சாலையில், பள்ளி மாணவியை உரிய பேருந்து நிறுத்தத்தில் இறக்கிவிடாமல் இரவில் அலட்சியமாகச் சென்ற அரசு பேருந்தைக் கண்டித்து, கிராம மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே உள்ள கொள்ளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சாஸ்தி கீர்த்தனா (15). இவர் தாராபுரம் சர்ச் சாலையில் உள்ள அரசு நிதியுதவி பெறும் பள்ளி ஒன்றில் 8ஆம் வகுப்பு படித்து வருகிறார். ஸ்பெஷல் வகுப்புகள் முடித்துவிட்டு, தனது கிராமத்திற்குச் செல்வதற்காக திருப்பூரிலிருந்து பழனி நோக்கிச் சென்ற அரசு பேருந்தில் ஏறியுள்ளார்.



3 கிலோமீட்டர் தூரம் நடந்த மாணவி:

பேருந்து நடத்துனரிடம் தாரபுரம் பழனி சாலையில் உள்ள 'தேர்பட்டி பிரிவு' நிறுத்தத்தில் இறங்க வேண்டும் என மாணவி கூறியுள்ளார். ஆனால், "இங்கு பேருந்து நிற்காது" எனக் கூறி, அந்த நிறுத்தத்தில் இறக்காமல், அங்கிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒட்டன்சத்திரம் சாலை பிரிவு அருகே மாணவியை நடத்துனர் வலுக்கட்டாயமாக இறக்கிவிட்டுள்ளார்.

வழக்கமாக மாணவி வரும் பேருந்தில் அவர் வராததால் பதற்றமடைந்த பெற்றோர், பள்ளிக்குத் தொடர்பு கொண்டு கேட்டுள்ளனர். மாணவி வழக்கம்போல் பேருந்து நிலையத்திற்குச் சென்றுவிட்டதாகப் பள்ளி நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டது. இதையடுத்து, பெற்றோர் இருசக்கர வாகனத்தில் தேடிச் சென்றபோது, தேர்பட்டி பிரிவிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் புத்தகப் பையுடன் மாணவி தனியாக அழுதுகொண்டே நடந்து வந்தது தெரியவந்தது.

பெண்கள் திரண்டு சாலை மறியல்:

இச்சம்பவத்தால் ஆத்திரமடைந்த மாணவியின் பெற்றோர் மற்றும் கொள்ளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தேர்பட்டி பிரிவு அருகே பழனி சாலையில் திடீரென திரண்டு மறியலில் ஈடுபட்டனர். சம்பந்தப்பட்ட பேருந்து பழனியிலிருந்து மீண்டும் வரும் வரை காத்திருந்து, பேருந்துகளைச் சிறைபிடிக்கப் போவதாகக் கூறி முழக்கங்களை எழுப்பினர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தாராபுரம் போலீசார், மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, போராட்டத்தைக் கைவிடுமாறு எச்சரித்தனர். இதனால் போலீசாருக்கும் கிராம மக்களுக்கும் இடையே கடுமையான தள்ளுமுள்ளு மற்றும் வாக்குவாதம் ஏற்பட்டது.மாணவியின் தாயார் உருக்கமான பேட்டி:இதுகுறித்து பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் பாலாமணி கூறுகையில்,"தேர்பட்டி பிரிவில் பேருந்து நிறுத்தம் இருந்தும், கடந்த பல ஆண்டுகளாக அரசு பேருந்துகள் இங்கு நிற்பதே இல்லை. கடந்த ஆண்டு, அனைத்து பேருந்துகளும் இங்கு நின்று செல்ல வேண்டும் என அரசுப் போக்குவரத்து நிர்வாகம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், தற்போதும் அந்த உத்தரவை மதிக்காமல் என்னை 3 கிலோமீட்டர் தூரத்திற்கு முன்பே இறக்கிவிட்டுச் சென்றுவிட்டனர். இதனால் தன்னந்தனியாக பயத்துடன் நடந்து வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிறுத்தத்தை நம்பி நூற்றுக்கணக்கான மில் தொழிலாளர்களும், பொதுமக்களும் உள்ளனர். போக்குவரத்துத் துறை இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்," என்றார். பிரச்சனைக்குரிய பேருந்து அந்த வழியே வராததால், சம்பந்தப்பட்ட ஓட்டுநர் மற்றும் நடத்துநரை காவல் நிலையத்திற்கு வரவழைத்து உரிய விசாரணை நடத்துவதாகப் போலீசார் ஒப்புக்கொண்டனர்.

தாராபுரம் காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து, கிராம மக்கள் தற்காலிகமாகச் சாலை மறியலைக் கைவிட்டனர். இந்த மறியல் போராட்டத்தால் தாராபுரம் பழனி சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.



# நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

உதகை, ஜூன்.22-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு. தலைமையில்

நடைபெற்றது.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு (MGNREGS) பதிலாக தற்போது தேசிய அளவில் கொண்டுவரப்பட்ட விக்சித் பாரத் திட்டத்தை மாவட்ட ஆட்சி தலைவர் விவசாயிகளிடம் எடுத்தரைத்தார்.

மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை அன்று பொது மேலாளர், ஆவின், DR Dairy (மற்றும்) கால்நடை துறை அலுவலர்கள் இணைந்து விவசாயிகளுக்கு கால்நடை தொடர்பாக குறை தீர்க்கும் கூட்டம் நடத்துமாறு மாவட்ட ஆட்சியர அறிவுறுத்தப்பட்டது.தமிழக அரசால் உருவாக்கப்பட்ட முதன்மை பதப்படுத்தும் நிலயங்கள் சம்மந்தமான (PPC) விவரங்கள் குறித்த விரிவான அறிக்கையினை வேளாண்மை துணை இயக்குநர், வேளாண் வணிகம் ஆய்வு செய்து சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்பட்டது.அட்மா திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியம் பின்னேற்பு மானியமாக வழங்க கோரிக்கையினை வேளாண்மை இயக்குநர் அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்பட்டது. நெற்பயிர் விவசாயம் செய்யும் விவசாயிகள் பயன்படும் வகையில் மானியத்திட்டம் நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேளாண் இயக்குநர் கோரிக்கை கடிதம் அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர் அறி வுறுத்தப்பட்டது.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சித்ரா தோட்டக்கலை துணை இயக்குநர் சிவக்குமார், மற்றும் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தமிழக வெற்றிக்கழக தலைவர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ரத்ததானம்

திண்டுக்கல், ஜூன்.22-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அரசு மருத்துவமனையில் தமிழக வெற்றிக்கழக தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான ஜோசப் விஜயின் 52 வது பிறந்த நாளை முன்னிட்டு தவெக நிர்வாகிகள் ரத்ததானம் செய்தனர். இந்த ரத்த தான நிகழ்வில் தவெக நிர்வாகிகள் ஆண்கள் பெண்கள் என 52 பேர் ரத்த தானம் செய்தனர்.முன்னதாக மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா. மற்றும் பிரவீன் குமார் ரத்தம் வழங்கி இந்நிகழ்வை தொடங்கி வைத்தார்.மேலும் இந்நிகழ்வில் தவெக நிர்வாகிகள் பழனி பாலன், மிதுன் , ஜே பி சஞ்சய். மற்றும் சிவா பாலன். கண்ணன் .விக்டர். மகுடீஸ்வரன் மணிமுத்து கோபாலன் பிரகாஷ் கார்த்திக் செந்தில் குமார் மணிகண்ட பிரபு விஜய் பாலன் சுரேஷ்குமார் உமர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த ரத்த தானம் வழங்கும் நிகழ்வினை பாப்புலர் மெடிக்கல் சுரேஷ் மற்றும் சாய் லேப் சிராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது

# கோவை: டீ கடைக்காரரை கடத்திய 9 பேர் கைது

கோவை, ஜூன்.22-

கோவையில் முன்விரோதம் காரணமாக டீக்கடைக்காரரை கடத்தி பணம் கேட்டு மிரட்டிய கும்பலைச் சேர்ந்த 9 பேரை போலீஸார் கைது செய்தனர். தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரை சேர்ந்தவர் வேல்முருகன்(34). கோவை சேரன்மாநகரில் தங்கியிருந்து டீக்கடை நடத்தி வருகிறார். இவருடைய நண்பர் நாகராஜ்(36). இவர்கள் இருவரும் கொலை முயற்சி வழக்கில் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். சிறைக்குள்ளேயே அடிக்கடி சந்தித்துக்கொண்ட இருவரும், முதலில் யார் பிணையில் வெளியே செல்கிறார்களோ அவர், மற்றவருக்கு பிணை கிடைக்க உதவி செய்ய வேண்டும் என்று பேசியதாக கூறப்படுகிறது.

அதன்படி கடந்த டிசம்பர் மாதம் வேல்முருகனுக்கு பிணை கிடைத்தது. அவர் மத்திய சிறையில் இருந்து பிணையில் வெளியே வருவதற்கு முன்பு, தனது நண்பர் நாகராஜை சந்தித்து நான் பிணையில் செல்கிறேன். ஒரு மாதத்துக்குள் உனக்கும் பிணை கிடைக்க உதவி செய்வேன் என்று கூறியதாக தெரிகிறது. ஆனால் வேல்முருகன் பிணையில் வெளியே வந்த பின்னர் 5 மாதம் ஆகியும் தனது நண்பர் நாகராஜுக்கு பிணை எடுக்க உதவி செய்யவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே சிறையில் இருக்கும் நாகராஜை அவருடைய நண்பர்கள் பார்க்க சென்றபோது அவர் அழுது புலம்பி உள்ளார். இதனால் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக கடந்த 3 நாட்களுக்கு முன்பு தனது கடையில் வேல்முருகன் இருந்தார். அப்போது ஒரு காரில் வந்து 7 பேர் இறங்கினர். பின்னர் அந்த கும்பல் வேலமுருகன் கடைக்கு சென்று அவரை வெளியே அழைத்து வந்தது. தொடர்ந்து அவரை அந்த காருக்குள் ஏற்றி கடத்தி சென்றனர். பிறகு, ஒரு அறைக்குள் அவரை அடைத்து வைத்து அவரிடம் ரூ.2 லட்சத்துக்கும் அதிகமாக கேட்டு மிரட்டியதுடன் சரமாரியாக தாக்கியுள்ளனர்.

இதற்கிடையே அந்த கும்பலிடம் இருந்து தப்பித்து வெளியே வந்த வேல்முருகன் இது குறித்து பீளமேடு போலீஸாரிடம் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்தனர். அதில், சேரன்மாநகர் மற்றும் பீளமேட்டை சேர்ந்த 15 பேர் கொண்ட கும்பலுக்கு இந்த வழக்கில் தெடர்பு இருப்பது தெரியவந்தது.

இதில் மதுரை மாவட்டம் கருப்பாயூரணியை சேர்ந்த தர்மராஜ் (32), அதே மாவட்டம் செல்லூரை சேர்ந்த வெங்கட்பிரபு (25), தூத்துகுடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த இசக்கிமுத்து(32), தேனி மாவட்டம் பெரியகுளத்தை சேர்ந்த சசிகுமார் (23), கோவை ரத்தினபுரியை சேர்ந்த சுந்தர மகாலிங்கம் (29), பெங்களூருவை சேர்ந்த சுதீப் 23) உட்பட 9 பேரை கைது செய்தனர். இதில் மேலும் தொடர்புடைய சிலரை தேடி வருவதாக பீளமேடு போலீஸார் தரப்பில் தெரிவித்தனர்.



# நீட் தேர்வு: காவேரிப்பட்டினம் தேர்வு மையத்தில் 240 மாணவர்கள் பங்கேற்பு - பலத்த காவல் பாதுகாப்பு ஏற்பாடு

கிருஷ்ணகிரி, ஜூன்.22-

நாடு முழுவதும் மருத்துவப் படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வான (ழிணிணிஜி) தேர்வு இன்று நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையத்தில் 240 மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் நீட் தேர்வை எழுதினர்.தேர்வு முறையாகவும், பாதுகாப்பாகவும் நடைபெறுவதற்காக காவேரிப்பட்டினம் காவல் ஆய்வாளர் சங்கர் தலைமையில் 16க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். தேர்வு மைய வளாகம் முழுவதும் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், தேர்வுக்கு வந்த மாணவர்கள் மற்றும் அவர்களுடன் வந்த பெற்றோர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.மத்திய அரசின் நீட் தேர்வு வழிகாட்டுதலின்படி தேர்வு மையத்திற்குள் நுழைவதற்கு முன்பு மாணவர்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். மெட்டல் டிடெக்டர் மூலம் பரிசோதனை செய்த பின்னரே மாணவர்கள் தேர்வு அறைகளுக்குள் அனுமதிக்கப்பட்டனர். தடை செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் எடுத்துச் செல்லப்படாத வகையில் அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.மேலும், கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கல்வித்துறை அதிகாரிகள், அரசு அலுவலர்கள் மற்றும் தேர்வு கண்காணிப்பாளர்கள் தேர்வு மையத்தில் தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டனர். தேர்வு மையத்தில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டிருந்ததால் தேர்வு எந்தவித இடையூறும் இன்றி அமைதியான முறையில் நடைபெற்றது.நீட் தேர்வு எழுத வந்த மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேரும் கனவுடன் உற்சாகமாக தேர்வில் பங்கேற்றனர். தேர்வு மையத்திற்கு வெளியே பெற்றோர்கள் ஆவலுடன் காத்திருந்து மாணவர்களுக்கு உற்சாகம் அளித்தனர். தேர்வு நிறைவடைந்த பின்னர் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வெளியேறினர்.



# சாலையோர ஆக்கிரமிப்பால் மழைநீர் தேக்கம்: நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஜூன்.22-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே சாலையோர பகுதிகளில் சில வியாபாரிகள் பழைய செங்கல் மண் மற்றும் கட்டுமானக் கழிவுகளை கொட்டி மேடாக்கி தற்காலிக கடைகளை அமைத்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.நெடுஞ்சாலையோரத்தில் அமைந்துள்ள கழிவுநீர் கால்வாய்கள் வழியாக மழைநீர் தாழ்வான பகுதிகளுக்கு சென்று வெளியேற வேண்டிய நிலையில், கால்வாய்களை ஆக்கிரமித்து மண் கொட்டி மேடாக்கி கடைகள் அமைக்கப்பட்டுள்ளதால் மழைநீர் வெளியேற முடியாமல் சாலைகளில் தேங்கி நிற்கிறது. இதனால் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும், சாலையோர ஆக்கிரமிப்புகளால் போக்குவரத்து நெரிசலும் அதிகரித்து, பள்ளி மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் பாதுகாப்பாக நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மழைநீர் தேங்குவதால் சுகாதாரக் கேடும் உருவாகும் அபாயம் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றி கழிவுநீர் கால்வாய்களை சீரமைத்து மழைநீர் தடையின்றி செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவேரிப்பட்டினம் பேரூராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினருக்கு பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதிகாரிகள் விரைந்து ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

# நீலகிரி மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் நிலையங்களில் 2026 ஆம் ஆண்டிற்கான நேரடி சேர்கை

நீலகிரி, ஜூன்.22-

நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில்2026ம் ஆண்டிற்கான நேரடி சேர்க்கை 30.06.2026 வரை நடைபெறுகிறது. 14 வயது பூர்த்தி அடை ஆண்கள்/பெண்கள் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம். ஆண்களுக்கு அதிகபட்ச வயதுவரம்பு பெண்களுக்கு வயதுவரம்பு இல்லை.அரசு தொழிற்பயிற்சி நிலையம் குன்னூரில் பத்தாம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்க பொருத்துநர் (Fitter), குளிர்பதனம் மற்றும் தட்ப வெட்பநிலை கட்டுப்படுத்துதல் தொழில்நுட் (Refrigeration and Air Conditioning Technician), (Mechar Motor Vehicle), மின்சாரப்பணியாளர் (Electrician), கம்மியர் மின்னணுவியல் (Electror Mechanic), மேம்பட்ட CNC இயந்திர தொழில்நுட்ப வல்லுநர் (Advanced CNC Machini Technician), (Mechanic Electric Vehicle) தொழிற்பிரிவுகளுக்கும் தொழில்துறை ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லு (Industrial Robotics and Digital Manufacturing Technician), எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் கம்பியாள் (Wireman) ஈராண்டு தொழிற்பிரிவிற்கு பற்றவைப்பவர் (Welder) ஓராண்டு தொழிற்பிரிவிற்கும் அனைத்து பிரிவினரைச் சார்ந்த மாணம மாணவியர் விண்ணப்பிக்கலாம் /இம்மாவட்டத்திலுள்ள பழங்குடியினருக்காக இயங்கும் கூடலூர் (உப்பட்டி)தொழிற்பயிற்சி நிலையத்தில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பொருத்துநர் (Fitter) கம்பி மோட்டார் வண்டி (Mechanic Motor Vehicle), மேம்பட்டசிழிசி இயந்திர தொழில்நுட்ப வல்லும் (Advanced CNC Machining Technician), (Mechanic Elect Vehicle) ஆகிய ஈராண்டு தொழிற்பிரிவுகளுக்கும் தொழில்துறை ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்ட உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர் (Industrial Robotics and Digital Manufacturing Technicia ஓராண்டு தொழிற்பிரிவிற்கும், எட்டாம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்கள் கம்பியாள் (Wireman) ஈரான தொழிற்பிரிவிற்கும், பற்றவைப்பவர் (Welder) மற்றும் குழாய் பொருத்துபவர் (Plumber) ஆகிய ஓரான தொழிற் பிரிவுகளுக்கும் பழங்குடியினர் (ST) வகுப்பைச்சார்ந்த மாணவ/ மாணவியர் விண்ணப்பிக்கல என குன்னூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் தெரிவித்துள்ளார்.மேலும் விவரங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களையோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளலாம் தொலைபேசி எண்கள் 9499055707, 9047637393,866761908 (அரசு தொழிற்பயிற்சிநிலையம், குன்னூர்) 04262263449,8248763733,8072372607 (பழங்குடியினர் அரசு தொழிற் பயிற்சி நிலையம், கூடலூர்)



# பூந்தமல்லியில் வசந்த் அண்ட் கோ புதிய கிளை திறப்பு

சென்னை, ஜூன்.22-

வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை நிறுவனமான வசந்த் அண்ட் கோவின் 149வது புதிய கிளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது, சென்னை, பூந்தமல்லியில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன புதிய கிளையை, வசந்த் அண்ட் கோ நிறுவனத்தின் பங்குதாரர் தங்கமலர் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். திறப்பு விழாவை முன்னிட்டு, ரூபாய் 10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்குதங்க நாணயம், ரூபாய் 50,000க்கு மேல் வாங்குபவர்களுக்கு மிக்ஸி மற்றும் எக்ஸ்சேஞ்ச் ஆஃபர்கள் போன்ற சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தங்களுக்குத் தேவையான எலக்ட்ரானிக்ஸ் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்காகப் பொதுமக்கள் தங்களது குடும்பத்தினருடன் புதிய கிளையில் அதிகளவில் திரண்டனர்.புதிய கிளை திறப்பு குறித்து நிறுவனத்தின் பங்குதாரர் தங்கமலர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது, வாடிக்கையாளர்களின் நேரடித் திருப்திக்காக எளிய தவணை முறை வசதிகளுடன் இக்கிளை தொடங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். ஆன்லைன் வர்த்தகத்தை விட, வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு தரமான சேவைகளை வழங்குவதே தங்களதுநோக்கம் என்றும், அடுத்ததாக ஊத்துக்கோட்டையில் புதியகிளை திறக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சென்னையில் ரொட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் நார்த் ஈஸ்ட் 2026-27 புதிய நிர்வாகக் குழு பொறுப்பேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது

சென்னை, ஜூன்.22-

சென்னையில் ரொட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் நார்த் ஈஸ்ட் தனது 31வது பொறுப்பேற்பு விழாவை இன்று சென்னை எக்மோர் பிரசிடென்சி கிளப்பில் சிறப்பாக நடத்தியது. இந்த நிகழ்வில் 2026ருீ27 ரொட்டரி ஆண்டிற்கான புதிய நிர்வாகக் குழு அதிகாரப்பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டது. பிரபல குரோஷே கலைஞர், மதர் இந்தியாஸ் குரோஷே குயின்ஸ் (MICQ) அமைப்பின் நிறுவனர் மற்றும் பல கின்னஸ் உலக சாதனைகள் படைத்த ரொ.சுபாஷ்ரி நடராஜன், 2026ருீ27 ஆண்டிற்கான கிளப் தலைவராக பதவியேற்றார். ரொ.ஏ.ராஜரத்தினம் செயலாளராக பொறுப்பேற்றார். இவ்விழாவிற்கு ரொட்டரி மாவட்ட ஆளுநர் ரொ. ஸ்ரீராம் துவ்வூரி தலைமை தாங்கி புதிய நிர்வாகக் குழுவினருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தனது வாழ்த்துரையில், சமூக முன்னேற்றத்திற்கும் மனிதநேய சேவைக்கும் ரொட்டரி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.புதிய தலைவர் ரொ.சுபாஷ்ரி நடராஜன், தனது ஏற்புரையில் ஒன்றிணைந்து செயல்படுவோம் ஒன்றிணைந்து சாதிப்போம்" என்ற ஆண்டுத் தொனிப்பொருளை அறிவித்தார். சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இளைஞர் மேம்பாடு, உறுப்பினர் வளர்ச்சி மற்றும் கிளப் ஒற்றுமை ஆகிய ஐந்து முக்கிய துறைகளை மையமாகக் கொண்டு செயல்பட உள்ளதாக தெரிவித்தார்.நிகழ்வின் ஒரு பகுதியாக, உயர்கல்வி பயிலும் பொருளாதார வசதி குறைந்த மாணவருக்கான முதல் பருவக் கல்விக் கட்டண உதவித் தொகை வழங்கப்பட்டது. இது கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான ரொட்டரியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.மேலும், கடந்த ஆண்டு சிறப்பாக பணியாற்றிய முன்னாள் தலைவர் ரொ. எஸ். நாராயணன் மற்றும் அவரது அணியினரின் சேவைகள் பாராட்டப்பட்டன. பல்வேறு சமூக சேவைத் திட்டங்களில் சிறந்து விளங்கிய உறுப்பினர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.மாவட்டத் தலைவர்கள், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், பல்வேறு ரொட்டரி கிளப் தலைவர்கள், ரொட்டேரியன்கள், குடும்பத்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு உற்சாகமான சூழலில் நடைபெற்றது.சென்னை எக்மோர் பிரசிடென்சி கிளப்பில் நடைபெற்ற ரொட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் நார்த் ஈஸ்ட் 31வது பொறுப்பேற்பு விழாவில் மாவட்ட ஆளுநர் ரொ. ஸ்ரீராம் துவ்வூரி, புதிய தலைவர் ரொ. சுபாஷ்ரி நடராஜன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், விருது பெற்றவர்கள் மற்றும் ரொட்டேரியன்கள் கலந்து கொண்டனர்.



# திமுக ஜென்இசட் மீட் அப் நிகழ்ச்சி: இளைஞர்களிடம் திராவிடக் கொள்கைகளை கொண்டு செல்லும் முயற்சி

கிருஷ்ணகிரி, ஜூன்.22-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் திமுக சார்பில் இளம் தலைமுறையினரை சமூக நீதி, சமத்துவம், பகுத்தறிவு மற்றும் திராவிடக் கொள்கைகளுடன் இணைக்கும் நோக்கில் "DMK Gen-Z Meet Up" நிகழ்ச்சி உற்சாகமாக நடைபெற்றது. காவேரிப்பட்டினம் அண்ணா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு திமுக நிர்வாகி தினேஷ் தலைமை தாங்கினார். மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் (மமக)சோயப் உஷேன் சிறப்புரையாற்றி, திராவிட இயக்கத்தின் வரலாறு, சமூக நீதிக்கான போராட்டங்கள் மற்றும் இன்றைய இளைஞர்களின் பங்கு குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில் நகர தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் ஸ்ரீ தினேஷ், திமுக நிர்வாகி காமேஷ், நகர மாணவரணி துணை அமைப்பாளர் சிற்றரசன், சுற்றுச்சூழல் துறை ஒன்றிய துணை அமைப்பாளர் அபி கவி கோவிந்தராஜ், நகர சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் அக்பர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு இளைஞர்களுடன் கலந்துரையாடினர்.இந்நிகழ்ச்சியை முன்னிட்டு நகரின் முக்கிய பகுதிகளில் பிரம்மாண்ட விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் மற்றும் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் படங்களுடன் அமைக்கப்பட்டிருந்த பதாகைகள் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தன. மேலும், இளைஞர்கள் எளிதாக இணையும் வகையில் க்யூஆர் குறியீடு மற்றும் வாட்ஸ்அப் இணைப்பு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் ராம், ஜெயபிரகாஷ், பிரகாஷ், வினோத், வல்லரசு,அகில், விஜி, விக்கி, வல்லரசு, பிரகாஷ்,இளையராஜா, சூர்யா, அக்பர்,பாலாஜி, அன்பு உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் சமூக மற்றும் அரசியல் துறைகளில் தங்களது பங்களிப்பை அதிகரிப்பது குறித்து கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். திமுகவின் கொள்கைகள், அரசின் நலத்திட்டங்கள் மற்று ம் சமூக முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த ஜென் இசட் மீட் அப் நிகழ்ச்சி, காவேரிப்பட்டினம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள இளைஞர்களிடையே வரவேற்பைப் பெற்றது.










# விஜய் பிறந்தநாளை முன்னிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள்ரத்த தானம் வழங்கினார்

படப்பை, ஜூன்.22-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வடமேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சாலமங்கலம் ஊராட்சியில், தமிழக முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு குன்றத்தூர் வடமேற்கு ஒன்றியத் தலைவர் விஜயகுமார் மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர் சரண்யா சங்கர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

குன்றத்தூர் வடமேற்கு ஒன்றிய சாலமங்கலம் ஊராட்சி தமிழக வெற்றி கழக நிர்வாகி கோ. டேவிட் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முகாமில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று ரத்ததானம் செய்தனர் அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரத்ததானத்தின் அவசியம் மற்றும் அதன் சமூகப் பயன்கள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், ரத்ததானம் என்பது உயிர் காக்கும் உன்னதமான சேவை என்றும், இளைஞர்கள் தொடர்ந்து இதுபோன்ற சமூக நலப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை சமூகப் பணிகள் மூலம் கொண்டாடும் வகையில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாம் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதில் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பிரகாஷ் மற்றும் குன்றத்தூர் வட மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் சாலமங்கலம் ஊராட்சி நிர்வாகிகள் தவெக கட்சி நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்





# வெலிங்டன்gu இராணுவ பயிற்சி மையத்தில் உலக யோகா தின நிகழ்ச்சி

நீலகிரி, ஜூன்.22-

நீலகிரி மாவட்டம் குன்னூர், வெலிங்டன் மெட்ராஸ் ரெஜிமெண்ட் ராணுவ பயிற்சி மையத்தில்,இளம் ராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, ராணுவ பயிற்சி மையத்தின் சார்பில் குன்னூர் தங்கராஜ் மைதானத்தில் நடந்த உலக யோகா தின நிகழ்ச்சியில், ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட இளம் ராணுவ வீரர்கள்,பயிற்சி பெறும் இளம் வீரர்கள், ராணுவத்தினர் மற்றும் குடும்பத்தினர், பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்று யோகாசனம், யோகக் கலைகள் மற்றும் சுவாசப் பயிற்சிகள் மேற்கொண்டனர்.

இதில் ஈஷா யோகா மையம் சார்பில் யோகா பயிற்றுனர்கள் கலந்து கொண்டு உலக யோகா தினத்தை சிறப்பித்தனர்.

# திருப்பத்தூரில் ஜலசா.ஜலசா.குப்பைகளுடன் நகராட்சி வாகனத்தை தள்ளிச்சென்ற தூய்மை பணியாளர்கள்

ஜோலார்பேட்டை, ஜூன்.22-

திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் குப்பைகளை ஏற்றி வந்து பழுதாகி நின்ற வாகனத்தை தூய்மை பணியாளர்கள் தள்ளியபடி சென்ற வீடியோ வைரலாகி வருகிறது. திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் 36 வார்டுகள் உள்ளன. இப்பகுதிகளில் கொட்டப்படும் குப்பைகளை நாள்தோறும் திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து வாகனங்கள் கொண்டு செல்லப்பட்டு அதன்மூலம் சேகரிக்கப்பட்டு பின்னர் குப்பை கிடங்கு பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வழக்கம்போல நேற்று நகராட்சி அலுவலகத்தில் இருந்து குப்பைகளை சேகரிக்க அனைத்து வார்டு பகுதிகளுக்கும் வாகனங்கள் கொண்டு செல்லப்பட்டது. அப்போது நடுரோட்டில் குப்பைகளை ஏற்றி வந்த லோடுவேன் திடீரென பழுதாகி நின்றது. அதனை தூய்மை பணியாளர்கள் நகராட்சி அலுவலகம் வரை தள்ளிச்சென்றனர். இந்த வீடியோ காட்சிகள் தற்போது இணையதளங்களில் வைரலாகி வருகிறது





■ தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில் பள்ளிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பல்வேறு இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் தொடர் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இந்நிகழ்வின் போது மாணவிகள், பெண்கள் மற்றும் பொதுமக்களுக்கு அவர்களின் பாதுகாப்பு, சட்ட உரிமைகள், சைபர் கிரைம் இணையவழி மோசடிகளில் இருந்து எச்சரிக்கையாக இருப்பது, பாலியல் தொல்லைகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை உடனடியாக காவல்துறைக்கு தெரிவிப்பதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.மேலும், அவசர காலங்களில் உதவி பெறுவதற்கான:100 ரு காவல்துறை அவசர உதவி எண்181 ரு மகளிர் உதவி எண்1098 ரு குழந்தைகள் உதவி எண்1930 சைபர் கிரைம் புகார் உதவி எண்ஆகிய சேவை எண்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

# தேனிஅல்லிநகரம் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், திடீர் ஆய்வு

தேனி, ஜூன்.22-

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், திடீர் ஆய்வு மேற்கொண்டார்.தேனி அல்லிநகரம் நகராட்சி பகுதியில் செயல்பட்டுவரும் அறிவுசார் மையத்தில் UPSC, TNPSC, SSC,TRB Uniform service உள்ளிட்ட பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு தயாராகி வரும் மாணவர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலந்துரையாடி, அவர்கள் மேற்கொண்டு வரும் போட்டித்தேர்வு தயாரிப்புகள், அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிந்து, போட்டித்தேர்வுகளை எளிய முறையில் கையாளுவதற்கான வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், மாணவர்கள் தங்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பு இலக்குகளை அடைவதற்காக முழு அர்ப்பணிப்புடன் தயாராகி வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.இந்நிகழ்வின்போது, அறிவுசார் மையத்தில் பயிலும் மாணவர்கள், கூடுதல் மின்விசிறி மற்றும் குடிநீர் வசதி அமைத்து தர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர். மாணவர்களின் கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, இன்றைய தினமே நகராட்சி நிர்வாகம் சார்பில் கூடுதல் மின்விசிறிகள் மற்றும் குடிநீர் தேவைக்காக சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அறிவுசார் மையத்தில் மாணவர்க ளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் சிறப்பாக பராமரிக்கப்படுவதையும், போட்டித்தேர்வுகளுக்குத் தேவையான புத்தகங்கள் கிடைப்பதையும் உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.



# பாபா மெட்ரிக் பள்ளியில் உலக யோகா தினம் சிறப்பாக கொண்டாட்டம்



மானாமதுரை, ஜூன் .22-

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, மானாமதுரையில் உள்ள பாபா மெட்ரிக் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொண்டு பல்வேறு யோகாசனங்களை செய்து காட்டினர். மேலும், யோகாவின் முக்கியத்துவம், உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு யோகா வழங்கும் நன்மைகள் குறித்து மாணவர்கள் யோகா பயிற்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் ஆர். கபிலன் மற்றும் நிர்வாகி ஆர். மீனாட்சி ஆகியோர் தலைமை தாங்கினர். பள்ளியின் முதல்வர் எம். சாரதா முன்னிலை வகித்தார். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர். யோகா தினக் கொண்டாட்டம் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்புடன் உற்சாகமாக நடைபெற்றது.

# 1400 வீரர்கள்... யோகா வடிவில் அணிவகுப்பு!"Yoga forHealthy Ageing"விழிப்புணர்வை ஏற்படுத்திய ITBP வீரர்கள்

சிவகங்கை, ஜூன்.22-

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் சார்பில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்டம் இலுப்பைகுடியில் உள்ள இந்தோ திபத் எல்லை பாதுகாப்பு படை (ITBP) பயிற்சி மையத்தில் 1400 வீரர்கள் பங்கேற்று, மைதானத்தில் யோகா வடிவில் அணிவகுத்து நின்று யோகா பயிற்சி மேற்கொண்டனர்.




இந்த ஆண்டின் மையக்கருப்பொருளான "Yoga for Healthy Ageing" (ஆரோக்கியமான முதுமை அடைதலுக்கான யோகா) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ITBP




டி.ஐ.ஜி ஜஸ்டின் ராபர்ட் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவு சார்பில் மருத்துவர் வை. தங்கம் BNYS, உதவி மருத்துவ அலுவலர் அவர்கள் வீரர்களுக்கு யோகா பயிற்சி அளித்தார்.

யோகாவின் முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் 1400 வீரர்களின் இந்த பிரம்மாண்ட நிகழ்வு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.




# முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள்: மானாமதுரையில் ரத்ததான முகாம்

மானாமதுரை, ஜூன்.22-

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு, மானாமதுரை நகரக் கழகம் சார்பில் ரத்ததான முகாம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் முத்து பாரதியின் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற முகாமிற்கு, மானாமதுரை நகரக் கழகச் செயலாளர் நம்பிராஜன் தலைமை வகித்தார். மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள செல்வா மருத்துவமனையில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாமில், நகரக் கழக நிர்வாகிகள் ராஜேஷ் கண்ணன், என்.பி. நமச்சிவாயம், ஏ.சி. மாரிமுத்து, தீனுர் பாலா, நாகலிங்க நகர் சந்தோஷ், ஆனந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், ஏராளமான தன்னார்வலர்கள் ஆர்வமுடன் பங்கேற்று ரத்ததானம் செய்தனர். சமூக நலன் மற்றும் மனிதநேயத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற இந்த முகாம் பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றது.




# ஜவ்வாது மலையில் பீப்பிள் போரம் ஆப் இந்தியா சார்பில் மாபெரும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா

திருவண்ணாமலை, ஜூன்.22-

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலைக்கு உட்பட்ட தஞ்சான் கொள்ளை பகுதியில் பீப்பிள் போரம் ஆப் இந்தியா அமைப்பின் சார்பில் மாபெரும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், அப்பகுதி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டு மகிழ்விக்கப்பட்டனர். நிகழ்ச்சிக்கு பீப்பிள் போரம் ஆப் இந்தியா அமைப்பின் தலைவர் டாக்டர் சரஸ்வதி




தலைமை வகித்தார். கௌரவத் தலைவர் டாக்டர் மு.சா. சிங்கத் தமிழச்சி மற்றும் மாநில பொதுச் செயலாளர் மயிலை மனோ ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். மலைவாழ் மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.




# அவிநாசியில் நடைபெற்ற திருவாசக மாநாட்டில் தேவேந்திர மடாதிபதி பங்கேற்பு

திருப்பூர், ஜூன்.22-

திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் கடந்த ஜூன் 14 ஆம் தேதி திருவாசக மாநாடு நடைபெற்றது. சைவ சமய மரபுகளை எடுத்துரைக்கும் வகையில் நடைபெற்ற இம்மாநாட்டில் ஏராளமான சிவனடியார்கள் மற்றும் ஆன்மிக ஆர்வலர்கள் பங்கேற்றனர்.அவிநாசி சிவ செல்வி அம்மாவின் பரிந்துரையின் பேரில் தேவேந்திர மடாதிபதி ராஜ தேவேந்திர சுவாமிகள் மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டில் சிவனடியார்கள் திரளாக பங்கேற்று ஆன்மிக உரைகளை கேட்டு பயனடைந்தனர்.

மாநாட்டின் போது சைவ சமயத்தின் சிறப்புகள், திருவாசகத்தின் பெருமைகள் மற்றும் ஆன்மிக நெறிகள் குறித்து பல்வேறு அறிஞர்கள் உரையாற்றினர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் மாநாட்டின் ஆன்மிக சூழலை பாராட்டினர்.

# மதுரை மாவட்டத்தின் 220வது ஆட்சியராக நிஷாந்த் கிருஷ்ணா பொறுப்பேற்பு

மதுரை, ஜூன்.22-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (21.06.2026) புதிய மாவட்ட ஆட்சியராக திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் முன்பு உதவி ஆட்சியர், சார் ஆட்சியர், SIPCOT மற்றும் GUIDANCE நிறுவனங்களில் நிர்வாகப் பொறுப்புகள், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பதவிகளில் பணியாற்றியுள்ளார்.






■ தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம்,கள்ளர் பள்ளி கிளை சார்பாக மதுரை மாவட்ட கள்ளர் சீரமைப்பு வளாகம் முன்பு 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட தலைவர் மாரீஸ்வரன் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம், நடைபெற்றது

# தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஜூன்.22-

தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சேலம், ஈரோடு, திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. கோவை, நீலகிரி, திண்டுக்கல், தேனி, சிவகங்கை மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது



# மதுரை திருநகரில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு

மதுரை, ஜூன்.22-

மதுரை திருநகரில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மற்றும் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமான கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர், புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் மருதுபாண்டியன் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று அலுவலகத்தை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினர்.

புதிய அலுவலகம் மூலம் தொகுதி மக்களின் கோரிக்கைகள், குறைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான பணிகள் மேலும் விரைவாகவும், திறம்படவும் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் தவெக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். புதிய அலுவலகம் திறக்கப்பட்டதன் மூலம் தொகுதி மக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கும் இடையிலான தொடர்பு மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161